Registered as a Newspaper [illegible] 04 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 17 (30-01-94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 346

## பதிவுக்கு உட்படுத்தாத மோட்டார் ஊர்திகள் பதிவுசெய்ய சந்தர்ப்பம்

இதுவரை காலமும் தங்களுடைய மோட்டார் ஊர்திகளை பதிவுக்குட்படுத்தாதவர்கள் கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு தமது மோட்டார் ஊர்திகளை எடுத்துச் சென்று எதிர்வரும் 31 - 01 - 94 திங்கள் தொடக்கம் 03 - 02 - 94 வியாழக்கிழமை வரையுமான காலப்பகுதிக்குள் காலை 8.30 தொடக்கம் மாலை 3.30 மணி வரையிலும் பதிவுக்குட்படுத்துமாறும், பதிவுக்குட்படுத்த வரும்போது அதற்குரிய கட்டணங்களையும், சிறிலங்காவினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் இருப்பின் அவ் ஆவணங்களையும் தத்தமது குடும்ப அட்டைகளையும் தவறாது எடுத்து வருமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## மார்ச்சில் உள்ளூராட்சி தேர்தல்

# வவுனியாவில் பெரும்படை குவிப்பு

# கிழக்கிற்கு அதிகாரிகள் விரைவு;

## 'பாதுகாப்பு' நிலைகுறித்து ஆராய்வு

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்திலும், வவுனியா நகர்ப்பகுதியிலும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து அப் பகுதியில் இராணுவத்தினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் பெருமளவு துருப்புக்கள் குவிக்கப்பட்டு வருவதோடு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும் அப் பகுதிக்குத் திடீர் விஜயங்களை மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்து வருவதோடு புதிய பணிப்புக்களையும் விடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக வவுனியா எல்லையில் பெரும் தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. வவுனியா நகரசபைத் தேர்தலுக்கு முன் ஏற்பாடாக இந்தப் படைக்குவிப்பு இடம்பெற்றுள்ளதாகவும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு வவுனியா, மதவாச்சி எல்லைப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும், ஒரு தொகுதியினர் தாண்டிக்குளம் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, பொலிஸ்மா அதிபர் பிராங்க் டி சில்வா மற்றும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று திருமலைப் பகுதிக்குச் சென்றுள்ளது.

மார்ச் மாதம் நடைபெற

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி முகாம்களுக்கு பிராந்திய தளபதி விஜயம்

(கொழும்பு)

வடபிராந்தியத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனவிரத்னா வட பகுதியிலுள்ள முக்கிய முகாம்களை

மேலாகப் பயிற்சியைப்பெற்று விட்டு சிறிலங்கா திரும்பி நான்கு நாட்களில் இவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் நியமனம் தொடர்

## ஒற்றையாட்சியை பேணுவது அரசாங்கத்தின் பொறுப்பு

(கொழும்பு)

ஒற்றையாட்சி முறையை

டி. பி. விஜேதுங்கா

கொண்டு பேசுகையிலேயே

## உடைக்கப்பட்ட தபால்கள்

(யாழ்ப்பாணம்)

இம்முறை கொழும்பில் இருந்து யாழ். பிரதான தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்ட பதிவுத் தபால்களில் சுமார் 75 சதவீதமான பதிவுத் தபால்கள் உடைக்கப்பட்டே வந்துள்ளதாக யாழ். பிரதான தபாலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உடைக்கப்பட்ட தபால்களை திரும்ப ஒட்டியும் அதே நேரத்தில் அதிக பசையினால் ஒட்டப்பட்டமையினால் மற்றைய பதிவுத் தபால்களிலும் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டிருந்ததாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போராட்ட செய்திகளை பரப்புவதில் 'விடியலின் ராகங்கள்' உதவும்

### அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன்

(யாழ்ப்பாணம்)

போராட்டச் செய்திகளை மக்கள் மத்தியில் பரப்புவதில் தமிழீழ இசைக்குழுவின் இந்த இசை நாடா உதவும்.

இவ்வாறு அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள், நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'விடியலின் ராகங்கள்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, எமது மக்களின் துன்பங்கள், எமது போராளிகளின் வெற்றிகள், தியாகங்கள் இந்த ஒலிப்பதிவு நாடாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்புமண் பாட்டு,

வங்களில் இந்தமக்கள்கலைத் துறையில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அங்கு வெளியீட்டுரை நிகழ்த்தும் போது, போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலே இந்தப் போராட்டத்துடன் இணைந்து நிற்கின்ற வீரத்தை உலக மக்களிடையே ஊடுருவிச்செல்லும் விதமாக இந்த ஒலிப்பதிவு நாடா அமைந்துள்ளது.

விடுதலை பெறும் அத்தினத்தில் நாம் சகல துறைகளிலும், வளம் பெற்றிருக்க வேண்டும் என்பதே தலைவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாணிபம்/தொழில் முயற்சி ஈடுபடுவோர் கவனத்திற்கு

தமிழீழத்தில் வாணிபம்/தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் கீழ்க்காணும் ஒழுங்கு முறைகளைக் கருத்திற் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

வேடுகள் பேணப்பட வேண்டும்.

∘ அனைத்து விற்பனவுகளுக்கும் விற்பனவுச் சிட்டைகள் வழங்கப்படவேண்டும்.

∘ செயல் முறைக்காகப் பெற்றுக்கொள்ளும் அனைத்து

செனவிரத்னா வட பகுதியிலுள்ள முக்கிய முகாம்களை நேரில் சென்று பார்வையிட்டார். இதன் முதற்கட்டமாக பலாலி இராணுவ முகாமிற்கு நேற்று முன்தினம் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார் என தெரியவந்துள்ளது.

இவர் இந்தியாவின் முன்னணி இராணுவ முகாம் ஒன்றில் சுமார் ஒரு வருடத்திற்கு ...மை குறிப்பிடத்தக்கது.

இவரின் நியமனம் தொடர்பாக பாரிய சர்ச்சைகள் இராணுவ உயர் மட்டத்தில் ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்ட போதும் இராணுவ தளபதியின் விசேட பணிப்பின்பேரில்இப் பதவிக்கு மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனவிரத்னா நியமனம் பெற்றுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

(கொழும்பு)

ஒற்றையாட்சி முறையை நாட்டில கட்டி எழுப்புவது தொடர்பாக மக்களுக்கு உத்தரவாதம் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று குருநாகலில் இடம் பெற்ற கட்டடத் திறப்பு விழா ஒன்றில் கலந்து ... டி. பி. விஜேதுங்கா கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஒற்றையாட்சி முறையை கட்டி எழுப்புவதற்

(4ஆம் பக்கம் பார்க்க)

...என.

மட்டக்களப்புமண் பாட்டு, கூத்து வழியாக மக்களுக்கு புதிய செய்திகளை இன்று கூடச் சொல்லிக்கொண்டேயிருக்கின்றது. பல்வேறு வடி...

...விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

ஃ காசேடு, விற்பனை நாளேடு, கொள்வனவு நாளேடு, பேரேடு ஆகிய முறையான கணக்குப் பதி...

ஃ செயல் முறைக்காகப் பெற்றுக்கொள்ளும்அனைத்து சேவை வரவிற்கும் வரவுச் சிட்டைவழங்கப்படவேண்டும்

ஃ சிட்டைகளில் தங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்மீது கடற்படை தாக்கு; ஒரு மீனவரைக் காணவில்லை

(தொல்புரம்)

சுழிபுரம் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையின் "சுப்பர் டோறா" விசைப்படகில் ரோந்து வந்த கடற்படையினர் இடைமறித்து தாக்கியதில் மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என அஞ்சப்படுகிறது.

நேற்று அதிகாலை 4.45 மணியளவில் சுழிபுரம் புளியந்துறைச் கடற்பரப்பில் இடம்பெற்ற இப் பீரங்கித் தாக்குதல் சம்பவத்தின் போது தொழிலிற்காக சென்ற சுழிபுரம் மேற்கு இறாத்தலடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் சோமசுந்தரம் (வயது 47) என்ற மீனவரே கடலில் காணாமல் போயுள்ளார். அவரோடு சேர்ந்து தொழிலிற்கு சென்ற சக மீனவர் நீந்திக் கரைசேர்ந்துள்ளார். மேலும் பல மீனவர்கள் தமது தொழில் உபகரணங்கள் சேதப்பட்ட நிலையில் காயங்கள் எதுவும் இன்றி நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



லெப். விக்கினேஸ்வரராஜா (விக்கினேஸ்வரன்)

மட்டக்களப்பிலுள்ளவாகரை தட்டுமுனைப் பகுதியில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில் மர்ம துப்பாக்கி வேட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வன்னியனார் வீதியில் கடந்த புதன் காலை மர்மமான முறையில் தீர்க்கப்பட்ட துப்பாக்கிவேட்டுகள் இப்பகுதி மக்களை அச்சத்திற்குள்ளாக்கியது.

காலை ஆறு மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுகள் கேட்கவே அயலில் உள்ள ஒரு சிலர் பதற்றமடைந்து வீதியை எட்டிப்பார்த்தபோது நீலநிற ஓட்டோ வாகனம் ஒன்று வேகமாக சென்று மறைந்ததைக் கண்டனர். துப்பாக்கிவேட்டுகள் தீர்க்கப்பட்டஇடத்தில் இரத்தக்கறைகள் காணப்பட்டன.

மேற்படி துப்பாக்கிச் சூடு காரணமாக எவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவில்லை எனவும் வீதியில் சன நடமாட்டம் இல்லாத அதிகாலை வேளையில் ஐ.தே.க. மாநகரசபை வேட்பாளர் ஒருவரது வீட்டிற்கு முன்பாக இச் சம்பவம் நடைபெற்றுள்ளது எனவும் பொலிசார் தெரிவித்தனர். இச் சம்பவத்தையடுத்து வன்னியனார் வீதியில்படையினர்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

# இன்றைய நிலையில் இந்திய தலையீடு அவசியமானதல்ல என கருதுகிறேன்

## காமினி திசநாயக்கா கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இன்றைய நிலையில் இந்திய அரசாங்கத்தின் தலையீட்டைக் கொண்டுவரவேண்டிய அவசியமில்லை என்றே நான் கருதுகிறேன் என காமினி திசநாயக்கா பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குபல்வேறு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் இன்னும் இறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள சிறிலங்கா அரசாங்கம் முயல வேண்டும். இது அவசியமானது. இதனை எவரும் மறுக்க முடியாது. இந்திய இராணுவம் தற்போதுள்ள நிலையில் மீண்டும் ஒருமுறை இலங்கைக்குத் தேவையா? அவசியமா? என்பதையிட்டு சிந்தித்தே செயல்பட வேண்டும். ஆனால் இராணுவ ரீதியான தலையீடு அவசியமில்லை என்பதே எனது கருத்தாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் போது இந்திய இராணுவத்தை இங்கு வரவழைப்பது தொடர்பான சரத்து எதுவும் கையெழுத்திடப்படவில்லை. இருந்த போதிலும் அவசியம் ஏற்பட்டால் சிறிலங்கா ஜனாதிபதி இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையிலேபேஇந்தியஇராணுவம் இங்கு வருகை தரக்கூடியதாக இருந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# எமது உரிமையை நாம் அனுபவிக்க மற்றவரிடம் கெஞ்ச வேண்டியதில்லை

## அதிமேற்றாணியாருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் எமக்குக் கடவுளால்வழங்கப்பட்டவை. அந்த உரிமைகளை எம்மை அனுபவிக்க் விடுங்கள். கடவுளால் வழங்கப்பட்ட உரிமைகளைத் தமிழ் மக்களாகிய நாம் அனுபவிப்பதற்கு நாம் வேறொரு இனத்தை அல்லது அரசை கெஞ்சிக் கேட்க வேண்டிய அவசியமில்லை. கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதிகளும், அரசியல் வாதிகளும் பல வருடங்களாக தமிழர்களுக்குஎதிராக இழைத்துவரும் வன்முறையால் ஏற்படும் துன்பங்களை நாம் மௌனமாக அனுபவித்து வருகிறோம். 132 வருடங்கள் பழமை வாய்ந்த புனித யாகப்பர் ஆலயம்மீது குண்டு வீசப்பட்டது. அரச படைகளின் குண்டுவீச்சிலிருந்து தப்புவதற்கு மக்கள் அடைக்கலம் தேடிச் செல்வது இந்தப் புனித ஸ்தலம், ஆலயத்தை நாம் திருச்சபை மற்றும் உலக ஐக்கியத்தின் வெளிப்பாட்டின் சின்னமாகக் கருதுகிறோம் என்று கொழும்பு அதிமேற்றாணியார் மேதகு நிக்கலஸ் மாக்கஸ் பெர்ணான்டோ ஆண்டகையிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் உள்ள முக்கியஸ்தர்கள் ஆண்டகைக்குச் சமர்ப்பித்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில்—

பெரும்பான்மை மக்களால்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசிய பொருளுடன் கோமாரி இன்று வரும்

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து வெள்ளிக்கிழமை புறப்பட்ட 'கோமாரி' கப்பல் இன்று காலை பருத்தித்துறை இறங்குதுறையை வந்து சேரும்.

இக்கப்பல் இங்கு வந்து சேர்ந்ததும் கப்பலில் எடுத்துவரப்பட்ட சீனி, மா, அரிசி மற்றும் செயலகம், யாழ். போதனா வைத்தியசாலைகளுக்கான மண்ணெய் மற்றும் பொருள்கள் உடனேயே இறக்க ஆரம்பிக்கப்படும். அதே சமயம் 'வாதுவ' கப்பலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### ஸ்ரீலங்கா அச்சகம்

மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ராஜா தியேட்டர் அருகாமை—ஸ்ரீ காந்தா அச்சக லேனிலேயே நடைபெறுகின்றது. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. (7307)

### விற்பனையாகிறது

''விண்ணில் சனி மாற்றம் மண்ணில் உங்கள் யோக பலன்'' ''எண் ஜோதிடம்'' (நீங்களும் நிச்சயம் அதிர்ஷ்ட சாலியாகலாம்) வேலணை சோதிடர் V.A. சிவராசா 152 B அரசடி றோட் கந்தர் மடம் யாழ்ப்பாணம். (7364)

### விற்பனைக்கு

மாணவர்க்கேற்ற மாண் புறு கதைகள் எழுதியவர் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள். விலை ரூபா 27/50 மட்டுமே. (7349)

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய டிசம்பர் மாத இறுதி இரண்டு வார நிவாரண உலர் உணவுப்பொருள்கள் சங்கக் கிளைளில் விநியோகிக்கப்படுகின்றன. இவ் விநியோகத்தின் போது அரிசியும், மாவும் மட்டுமே வழங்கப்படும் என்பது தெரிந்ததே. (22)

## திருட்டு

குடமியன மற்றும் வரணிப் பகுதியில் அண்மையில் இரவு வேளையில் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் அவ் வீட்டிலிருந்த 24 பவுண் தங்க நகைகளையும் எண்பதாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த 23-ம் திகதி இரவு சின்னையா தர்மரத்தினம் என்பவரது வீட்டில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி காவல் துறை பணிமனையில் புகாரிடப்பட்டுள்ளது. (86)

## பெறுமதிகூடிய முத்திரைகள்

பெறுமதி கூடிய முத்திரைகள் ஒரு வரையறுக்கப்பட்ட தொகை யாழ். அஞ்சல் அலுவலகத்தினால் பெறப்பட்டுள்

# திருமலை மாவட்டத்தில் வாக்கு சாவடிகள் குறைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போது வாக்குப்பதிவுக்கான வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டுக் குறைக்கப்பட்டுள்ளது.

201 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுவதற்கு திட்டமிட்டிருந்தபோதும்இப்போதுக அவை 134 இடங்களா. குறைக்கப்பட்டுவிட்டது குஞ்சவெளி, பிரதேச சபைப் பகுதியிலும், இறக்கக்கண்டி கிராமத்திலும் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிகள் இரத்துச் செய்யப்பட்டு அவை நிலா வெளிக்கு மாற்றப்பட்டுள்ளன. கள்ளம் பற்று, திரியாய் வாக்குச் சாவடிகள் முறையே திரியாய் இற்கும், புல்மோட்டைக்கும் இடம் மாற்றப்படவுள்ளது. மூதூர் பிரதேச சபையின் கீழ் கடற்கரைச் சேனை கூனித்தீவு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிகள் மூதூர் நகருக்கு மாற்றப்பட்டுள்ளன. சங்குவேலி, மேமன்காமம் பகுதி, மற்றும் ஆசாத் நகர் வாக்குச் சாவடிகள் கிளிவெட்டிக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதே போல இன்னும் பல வாக்குச்சாவடிகள் மாற்றப்பட்டு மொத்த வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 134 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

### பெண் காயம்

கட்டுத்துவக்கு வெடித்து பெண் உல்லாசப்பயணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

பொலநறுவைப் பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த இவர் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# குடத்துடன் போரிட்ட தடைமுகாம் அதிகாரி!

(வவுனியா)

தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாக எவர்சில்வர் நீர்க்குடம் எடுத்து வந்த ஒருவருக்கு எதிர்பாராத அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

பயணிகள் பொருள்களைச் சோதனை செய்த படையினர், ஒருவரிடம் எவர்சில்வர் குடம் இருப்பதைக் கண்டு அதுகுறித்து விசாரித்தனர். குடத்தை கையில் எடுத்த அதிகாரி அதை மேலும் கீழும் குலுக்கியபோது 'கிளிங்' என்று சத்தம் கேட்டது.

கோபமடைந்த அதிகாரி எங்களை ஏமாற்றி சைக்கிள் போல்ஸ் கடத்தவா பார்க்கிறாய் என்று கத்தினார். குடம் எடுத்து வந்தவரும் ஏதோ கூறிப்பார்த்தார். அதிகாரி விடவில்லை சுத்தியல், குறடு ஸ்கூருட்ரைவர்கள் வரவழைக்கப்பட்டன.

குடத்தின் வாய் விழிம்பு உடைக்கப்பட்டது. 'கிளிங் கிளிங்' சத்தம் தொடர்ந்து கேட்டது. போல்ஸ் வெளியே வந்தபாடில்லை. கோபத்துடன் அதிகாரி குடத்தை கல் ஒன்றின் மீதுஎறிந்து உடைக்க முயன்றும் குடம் நெளிந்தது தான் மிச்சம். ஐந்நூறு ரூபா பெறுமதியான குடத்தையும் இழந்து சரமாரியான உதையும் வாங்கி குடம் எடுத்து வந்தவர் வெறும் கையோடு பயணத்தை தொடர்ந்தார்.

# பல்கலை. அனுமதியில் விளையாட்டுக்கு புள்ளி

### பல்கலை. மான்ய ஆணைக்குழு ஆலோசனை

(கொழும்பு)

பல்கலைக்கழக புகுமுகத் தேர்வில்மாணவர்கள் பெறும் புள்ளிகளுடன் விளையாட்டுத் துறை மற்றும் மாணவ தலைமைத்துவம் போன்றவற்றிற்கு முககியத்துவம் அளிக்கும் வகையில் குறிப்பிட்ட வீதத்தில் புள்ளிகளை வழங்குவது பற்றி பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழு ஆலோ ஆசிரியர்களும்மாணவர்களின் கல்வியில் மட்டும் கரிசனை காட்டுவதுடன் நிற்காமல் விளையாட்டு, தேகப்பயிற்சி, சாரணர் இயக்கம் மற்றும் கலை கலாசார நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள்ஆர்வத்துடன் கலந்துகொள்ளவும் சாதனை நிலைநாட்டவும்

# நல்லின தென்னை நாற்று எடுத்துவர நடவடிக்கை

பத்தாயிரம் நல்லின தென்னை நாற்றுகளை கொண்டுவருவதற்கு தற்போது கொழும்பில் தங்கி இருக்கும் யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி தென்னை நாற்றுக்களை அங்கிருந்து கொண்டு வந்து தென்னை மரச் செய்கை ஆராய்ச்சியாளரிடம் கொடுத்து அவற்றை நாற்றுப் போட்டு குடாநாட்டில் நல்லினத் தென்னைகளை உருவாக்கும் முயற்சியாகவே இது மேற்கொள்ளப் படுகின்றது. கடந்த வருடமும் நல்லினத் தென்னங்கன்றுகள் குடாநாட்டில் வழங்கப்பட்டது தெரிந்ததே. இவை குறுகிய காலத்தில் பெருமளவு பயன்தரக்கூடிய இனம் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

சங்கீத பூஷணம்

## திரு. வீ. கே. குமாரசாமி அவர்கள் 'இசைப் பேரறிஞர்' விருதை ஏற்பதனால்

## எம் இதய வாழ்த்துக்கள்


இன்னிசையின் விருந்துகளில் உயிர்ச்சுவையை
ஊட்டற்காகத்
தன்னிய வயலினிசை தனைச் சுரந்த குமாரசாமி
இன்னிசைப்பேரறிஞரெனும் விருதுபெறும்
இந்நாள் அன்னார்
பன்னலமும் பெற்றுயர்க எனவாழ்த்தி மகிழ்கிறோமே

வடமராட்சிக் கம்பன் கழகம்.
(5870)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15-2-1950

விண்ணில்
29-1-1993



### அமரர் கந்தையா சிவராஜன்

(நேரக்கணிப்பாளர் - லங்கா சிமெந்து லிமிட்டட் காங்கேசன்துறை)

குடும்பத்தலைவனாயும், வழிகாட்டியாயும் இருந்து
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்புத்தந்தையின்
ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

இளவேனில்
அல்வாய் வடக்கு. (7369)

மகன் சி. பிரபு
மற்றும் குடும்பத்தினர்

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
19 – 12 – 34



உதிர்வு
01 – 01 – 94

### வீரகத்திப்பிள்ளை சோமசுந்தரம்

அன்பிற்கு உருவாய் பாசத்தின் பிறப்பிடமாக-எங்களை
பெற்றெடுத்து நல்வாழ்விற்கு வழிகாட்டிய தந்தையே,
எங்கள் நல்வாழ்வைக் காணத் துடித்தீர்களே,
சடுதியில் காலன் கவர்ந்து விட்டாரே-எங்கள்
இதயத்தின் சுடராக ஒளிவீசும்-இவரின்
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

திருகோணமலை சேனையூர் 5-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது ஆசாத் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆவார்.

இவரது 31-ம் நாள் நினைவு அஞ்சலியை முன்னிட்டு 1994 01-31-ம் திகதி நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள சபிண்டிகரண நிகழ்ச்சியிலும் வீட்டுக் கிருத்தியங்களிலும், மதிய போசன விருந்துபசாரத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
மனைவி: சோ. ஸ்ரீராதாதேவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைள்.

(7373)

## நினைவு கூருகின்றோம்..

## 1994-01-30

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சியில் தேடுதல் நடவடிக்கைக்காகப் புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை வட்டக்கச்சி, தருமபுரம் வீதியில் வழிமடக்கி, முற்றுகையிட்டிருந்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

லெப். சம்பந்தன் (செல்லப்பா ஞானசுந்தரம் - திருகோணமலை)

சுகு (குமாரய்யா ரமேஷ் - கலைக்கேணி கிழக்கு-முல்லைத்தீவு)

1987 ஆம் ஆண்டு இதேதினம் வரையான மூன்று தினங்களும், மட்டு - கொக்கட்டிச்சோலை, பகுதியை முற்றுகையிட்டிருந்த சிறிலங்காப்படையினரால் படு

தொகை யாழ். அஞ்சல் அலுவலகத்தினால் பெறப்பட்டுள்ளது. உயர்விலை முத்திரைகள் தேவைப்படுவோர் தமது கோரிக்கைகளை நாளை திங்கள் காலை 10 மணிக்கு முன்பாக யாழ். பிரதி பிரதம அஞ்சல் அதிபரிடம் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதம அஞ்சலதிபர் அறிவித்துள்ளார்.

வியாபார நோக்கங்களிற்காக முத்திரை வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆலோசித்துள்ளது.

அண்மையில் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுபேசிய கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் வெ.சபாநாயகம் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், பெற்றோர்களும்,

துடன் கலந்து கொள்ளவும் சாதனை நிலைநாட்டவும் ஒத்துழைப்பும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

திடகாத்திரமான உடலிலே தான் திடமானஉள்ளமும்இருக்கும் நீதி,நேர்மை,வீரம்,விவேகம், விட்டுக்கொடுக்கும் பண்பு, தலைமைக்குகீழ்ப் படிவு, துணிவு, பணிவு ஆகிய பண்புகள் விளையாட்டு மைதானத்திலேயே கற்பிக்கப் படுகின்றன எனவும் தெரிவித்தார்.

ஓம்

விராட் விஸ்வப்பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 20 ஆம் நாள் (02-02-1994) புதன்கிழமை காலை 9-36 மணி முதல் 10-36 மணி வரை வரும் கன்னி இலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**கணேசலிங்கம் (கணேஸ்)**<br>(METAL WORKS)<br>அவர்கட்கும் | எமது சிரேஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>**லதா**<br>அவர்கட்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்று மாலை 4-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரத்திலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இரு வீட்டார் அழைப்பு

**லெட்சுமண ஆச்சாரி**
**கெங்காதரன் குடும்பத்தினர்**
314, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**க. சுப்பிரமணியம் [இந்திரன்]**
**குடும்பத்தினர்**
"சுரேஸ் இல்லம்" கேரதீவு வீதி,
தச்சன் தோப்பு - நாவற்குழி.

(தனிப்பட அழைக்க முடியாமைக்கு மன்னிப்புக்கோருகிறோம்.)

(7372)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## தணிகாசலம் வண்ணமணி

(வல்வெட்டித்துறை)

தோற்றம்
5-7-1906

மறைவு
1-1-1994

ஐந்து தலைமுறை கண்ட எங்கள் தாயாருக்கு நாளை 31-1-94 திங்கட்கிழமை காலை 6-00 மணிக்கு பெரியதம்பிரான் கோயிலடி பொலிகண்டி மேற்கில் இருக்கும் மருமகன் இராமநாதன் மேத்திரியாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரிகைகளிலும் அதனைத்தொடர்ந்து நண்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களிலும் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

பெரியதம்பிரான் கோயிலடி.
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்
பிள்ளைகள், பாட்டப்
பிள்ளைகள்.

(7356)

முற்றுகையிட்டிருந்த சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பல தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு யாழ். மானிப்பாய், நவாலிப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான,

**சின்னத்தம்பி சாந்தராசா -கண்ணன்** (நவாலி, மானிப்பாய் - யாழ்)

**சுப்பிரமணியம் நித்தியானந்தன்** (நவாலி, மானிப்பாய் - யாழ்)

யாழ் - அளவெட்டிப் பகுதியில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின், ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஊழியரான தமிழிளைஞன்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரச்சாவெய்திய,

**அஜித்** (பசுபதி அரிகரன் - இடது கரை, முத்தையன் கட்டு - முல்லைத்தீவு)

1991 ஆம் ஆண்டு மட்டு - குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மயூரன்** (நாவற்குடா - மட்டு)

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**உஷாந்தன்** (செல்லையா உதயகுமார் - புத்தூர் கிழக்கு - யாழ்)

**கிருபா** (சோமசுந்தரம் காண்டீபன் - கைதடி, நாவற்குழி யாழ்)

**வினோத்** (மாணிக்கராசா முரளிதரன் - நாகர் கோவில் வடக்கு - யாழ்)

**கலீபன்** (கந்தசாமி யோகநாதன் - வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம் - யாழ்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992 ஆம் ஆண்டு வவுனியா - தந்திரிமலை காட்டுப் பகுதியில் யானை தாக்கியதில் படுகாயமுற்றிருந்து சிகிச்சையின் போது எமைப் பிரிந்த துணைப் படை வீரர்,

**ஆறுமுகம்** (கல்லாறு, செட்டிகுளம் - வவுனியா)

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8477)

சிந்தனைக்கு

என் சொந்த ஆயுதங்கள் இழைத்த காயப்புண்களால் நான் அவதியுற்று அழிகிறேன்.

— ஓவிட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# காமினிதிஸநாயக்காவின் முரண்பாடுகள்

இனப்பிரச்சினை தொடர்பான சிங்கள அரசியல்வாதிகள் பேச்சுகள், நடவடிக்கைகள் எப்பொழுதும் பல முரண்பாட்டைக் கொண்டவை. இந்த வகையில்சிறிலங்கா ஜனாதிபதியில் இருந்து ஆளும், எதிர்க்கட்சிகளைச்சேர்ந்த அரசியல்வாதிகள் அனைவருமே அடங்குகின்றனர். இதில் வேறுபட்ட ஆட்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வகையிலேயே மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்துள்ள காமினி திஸநாயக்காவின் பேட்டியும் உள்ளது. 'இந்து' பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ள காமினி திஸநாயக்கா வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவுவது ஒரு தேசிய பிரச்சினையே, இது பயங்கரவாதப் பிரச்சினையல்ல எனத் தெரிவித்துள்ளதோடு, இப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு அவசியம் எனக் கூறியுள்ளதோடு, அதற்கு 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய-சிறிலங்கா உடன்பாடே சரியான தீர்வாக அமைய முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

காமினி திஸநாயக்காவின் இந்நிலைப்பாட்டில் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு முற்போக்கான சில கருத்துக்கள் இருப்பினும், அவரின் குழப்ப நிலையும் முரண்பாடுகளும் தெளிவாகவே தெரிகின்றது. தமிழ் மக்கள் இன்று நடாத்தும் ஆயுதப்போராட்டத்தை, தமிழரின் தேசியஇனவிடுதலைப் போராட்டம் என அவர் கூறாதுவிட்டாலும், ஒரு தேசிய பிரச்சினை என அவர் குறிப்பிட்டமை முன்னேற்றகரமானதே.

அதிலும், சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வடக்கு-கிழக்கில் நிகழ்வது பயங்கரவாதப் பிரச்சினையேஒழிய இனப்பிரச்சினை அல்ல எனக் கூறிவரும் வேளையில் இவ்வாறு காமினிதிஸநாயக்கா கூறியிருப்பது முக்கியமானது. இது வெளிப்படையாக ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவின் கருத்துடன் முரண்பாடு கொண்டதும் ஆகும்,

டி. பி. விஜேதுங்காவின் கருத்துடன், முரண்பாடான கருத்தை காமினி திஸநாயக்கா கொண்டிருப்பதும்

# மலையக மக்கள் பிரஜாவுரிமைபெற இந்தியர் கூட உதவவில்லை

**- தொண்டமான் தெரிவிப்பு**

(கொழும்பு)

எமது மக்கள்பிரஜாவுரிமை பெறுவதற்குகூட இந்தியா எமக்கு உதவவில்லை. எமது ஒற்றுமையினாலும் உறுதியான நிலைப்பாட்டினாலுமே அதனைப் பெறமுடிந்தது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ராகல தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; எமது சக்தியையும் செல்வாக்கையும் கண்டு சிலர் பொறாமைப் பட்டார்கள். எம்மை முறியடிக்க வேண்டுமென்று பலரும் முயற்சி செய்தார்கள்.

பொதுச்செயலாளர் காமினி திசாநாயக்காவிடம் காணி வாங்கினார். ஆனால் நான் சமுதாய நன்மைக்காகவே அவரை முதலமைச்சராக்க முனைந்தேன். இந்த சந்தர்ப்பத்தில் தான் விரோதிகள் நண்பராக மாற எம்மில் எட்டுப்பேர் துரோகிகளாக மாறினர் இது வெட்கப்படவேண்டிய ஒரு நிகழ்வு.

அற்ப சொற்ப ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எம்மைக்காட்டிக்கொடுத்தவர்கள் உங்கள் முன்னிலையில் இனி நடமாட முடியாது. அவர்கள் இனி நடைப்பிணமாகவே திரியவேண்டும் எமது சமுதாயத்தின் நலனை முன்னிட்டே மத்திய மாகாணத்தில் முன்பு என் மகன் போட்டியிட இருந்ததைக் கூட நிறுத்திவிட்டு மற்றையவர்களை போட்டியிட வைத்தேன் ஆனால் இன்று அவர்கள் சமூகத்துரோகிகள் ஆகிவிட்டார்கள்.

ஆனால் இன்று இவர்களுக்காக பரிந்து பேசி மன்னிப்புக் கேட்கப்படுகிறது தனிமனிதர்களின் தவறுகளை மன்னித்துக் கொண்டேயிருப்பது. காட்டிக் கொடுத்தோரைக் கட்சியில் தொடர்ந்து வைத்திருப்பது, எதிர்காலத்தில்எமது தாபனம் பலவீனமடையவே வழிகோலும் தனிமனிதர்களுக்காக எமது நிரந்தர கொள்கைகளை அடைவு வைக்க முடியாது. சமூக விரோதிகள் எட்டுப் பேருக்காக மன்னிப்பு கோரும் பொதுச்செயலாளர் கடந்த 26-ம் திகதி அட்டனில் கூடிய தேசிய சபைக்கூட்டத்திற்கு வந்து இதனை ஏன் கூறியிருக்கக்கூடாது என்றும் கேள்வி எழுப்பினார்.

# நேற்று வந்த சிலராலேயே இ.தொ. காவில் முரண்பாடு

**- செல்லச்சாமி தெரிவிப்பு**

(கொழும்பு)

இ. தொ. காவிற்குநேற்று வந்த சிலர் தலைவரைக் குழப்பி இன்றைய பிரச்சினைகள் உருவாவதற்கு காரணமாகவுள்ளனர். இவ்வாறு இ. தொ. காவின் பொதுச் செயலாளரும் ராஜங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அட்டன் நகரசபை மண்டபத்தில் தோட்டக் கமிட்டிகளின் தலைவர்கள் மத்தியில உரையாற்றிய செல்லச்சாமி மேலும் கூறுகையில், தலைவர் தொண்டமான் என்ற அரசியல் பல்கலைக்கழகத்தில் கல்விபயின்றவன் நான்; அந்த பல்கலைக்கழகத்திற்கு நேற்று வந்த மூவர் எமது தலைவரை திசை திருப்பப் பார்க்கின்றனர். தலைவர் தொண்டமானைத் தவிர வேறு ஒரு தலைவரை நான் நினைத்ததேயில்லை. இவர் இ. தொ. காவினதும், தோட்ட தொழிலாளர்களினதும் ஒரு உன்னத தலைவர் இராமபிரான் வனவாசம் அனுபவிக்கச் சென்றபோது பரதன் இராமபிரானின் பாதுகைகளை வைத்துஆட்சி நடத்தியதைப் போல தலைவர்தொண்டமான்இல்லாமல் போனால் கூட அவரின் பெயரை வைத்துத்தான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட வேண்டும் என்பது நான் எப்போதோ எடுத்த முடிவு.

இத்தகைய தலைவரையும், என்னையும் பிரிக்க முயல்பவர்கள் மூவர் மட்டுமே. இம் மூவருமே காங்கிரசின் துரோகிகள் ஆவர் எனவும் குறிப்பிட்டார்.

# என்னை விலைக்கு வாங்க எவராலும் முடியாது

**- இரா. தங்கவேல்**

(கொழும்பு)

என்னை விலைக்கு வாங்க எவராலும் முடியாது. ஹைதராபாத் நிசாமினாலும் கூட அது முடியப் போவதில்லை கொள்கைகளும், கோட்பாடுகளும் உன்னதமானவை. அன்றும், இன்றும் என்றும் நான் [illegible]

கலந்து கொண்டு உரையாற்றிய தங்கவேல் மேலும் கூறுகையில் மலையக மெங்கும் பரந்து விரிந்து வாழ்கின்ற எமது மக்களுக்கு அளப்பரிய பணியை ஆற்றி அவர்க [illegible]

# இந்தியாவின் உதவியைபெற காமினி இணைக்கப்பட்டார்

**கொழும்பு அரசியல் வட். கூறுகின்றன**

இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டே காமினி திசநாயக்கா மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைக்கப்பட்டுள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

காமினி திசநாயக்கா இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு காரணமான ஒருவர் என சுட்டிக் காட்டிய அவ் வட்டாரங்கள் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகமாக இருக்கக்கூடும் எனவும் தெரிவித்தன.

# ஜே. வி. பியின் செயற்பாடு தெற்கில் அதிகரிப்பு

கடந்த மாதம் தெற்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் யுத்த உபகரணங்களும் ஜே. வி பியினரின் செயற்பாடு மீண்டும் அதிகரித்து வருவதை காட்டுகிறது என அரசாங்க உயர் மட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, மாத்தளை, லுணுகம்வெஹர ஆகியஇடங்களில். 37 ரிவோல்வர்கள் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஜே. வி பி சந்தேகநபர்களும், முன்னாள் படையினரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இ. தொ. காவுடன் எனக்கும் நீண்ட காலத் தொடர்புண்டு

**எஸ். சதாசிவம்**

(கொழும்பு)

எங்கள் காலடியின் பின்னால் செல்வதாக பொதுச் செயலாளர் தெரிவிக்கின்றார் அவரினால் நாற்பது தொழிலாளர்கள் தெருவில் நிற்க கந்தப்பளையில் ஐந்து ஏக்கர் நிலத்தை காமினி திசாநாயக்காவிடம் இருந்துவாங்கியவர் பொதுச் செயலாளர். இதில் நயிக் இருபதுலட்சம் ரூபாவை பெற்றுக்கொள்ளவில்லையா? என ராகல தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றிய இ. தொ. கா உப தலைவர் எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

அங்குஉரைநிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுச் செயலாளர் தற்போது கடிதம் எழுதுகின்றார். இடையிலே புகுந்தவர்களால்தான் இப்பிரச்சினை என்கிறார். என்னைப் பொறுத்தமட்டில் இதில் என்னையும் சேர்த்தே அவர் கூறுவதாக கருதுகிறேன். ஆனால் எனது பெற்றோர் இ. தொ. காவைக்கட்டியெழுப்ப பாடுபட்டவர்கள் எனது சகோதரர் ராஜரட்ணம் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவர். எமது குடும்பத்திற்கும் இ தொ. காவிற்கும் பல தொடர்புகள் உண்டு இதில் யாரும் இடையில்வந்து சேர்ந்தவர்கள் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

# தெருக்கூத்திற்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

தற்போது குடாநாடெங்கும் பரவலாக வீதிகளில் நடாத்தப்பட்டு வரும் முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'அரசின் தடுமாற்றங்கள்' என்னும் தெருக்கூத்து மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வருகின்றது. இத்தெருக்கூத்து நடைபெறும் இடங்களில் மக்கள் பெருந்திரளாக கூடி பார்த்து ரசிப்பதுடன் பாராட்டியும் வருகின்றனர். (22)

# முதன்மை ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

யாழ். மாவட்ட முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த தகுதியானோர்க்கான எழுத்துப் பரீட்சை பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள வளவில் உள்ள நல்லூர் சி. சி த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது என கல்விப்பணிப்பாளர் அறிவிக்கிறார்.

# அரபுத் தீவிரவாதிகளை பாகிஸ்தான் வெளியேற்றும்

**- உள்நாட்டு அமைச்சர் பாபர்**

(இஸ்லாமாபாத்)

[illegible]

ஆகும்.

டி. பி. விஜேதுங்காவின் கருத்துடன், முரண்பாடான கருத்தை காமினி திஸநாயக்கா கொண்டிருப்பதும் வெளியிடுவதும் தவறானதொன்றல்ல. ஏனெனில் இலங்கையில் நடைபெறும் முக்கிய பிரச்சினை ஒன்றில் ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து இருக்கலாம். ஆனால் இன்றுள்ள சூழ்நிலையில் காமினி வெளியிட்ட கருத்து அவருடைய தனிப்பட்ட சொந்தக் கருத்தா அல்லது டி. பி. விஜேதுங்காவுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொள்ளும் நடவடிக்கையா? என்பதில் சந்தேகங்கள் எழ வாய்ப்புக்களும் அதிகம் உண்டு.

ஏனெனில், சில தினங்களுக்கு முன்னரே மீண்டும் ஐ. தே. கட்சியில் சேர்ந்துள்ள காமினி திஸநாயக்காவிற்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் ஆதரவும் அரவணைப்பும் அவசியமானதாகும். பாராளுமன்ற ஆசனத்திற்கான எதிர்பார்ப்பும், அமைச்சரவையில் இணைவதற்கான வாய்ப்பையும் எதிர்பார்த்திருக்கும் காமினிக்கு இது முக்கியமானதாகும். அத்தோடு, ஐ. தே. கவில் காமினி இணைக்கப்பட்டதற்கான எதிர்ப்பும் கட்சியில் பரவலாக உள்ளது. இந்நிலையில் ஐ. தே, க தலைமையின் கொள்கையைப் பாதிக்கும் அளவிற்கு அவரால் சுதந்திரமாகப் பேசமுடியுமா என்பதே சந்தேகத்திற்கான அடிப்படையாகும்.

ஆனால், டி. பி. விஜேதுங்காவுடனான கொள்கை முரண்பாடு உண்மையானதா? போலியானதா என்பதைவிட காமினி திஸநாயக்கா உள்முரண்பாடு பெரிதாகவே உள்ளது. அதாவது, விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வுத் திட்டமே அவர்கள் தமது தீவிரவாதப் போக்கை கைவிட உதவும் எனத்தெரிவிக்கும் காமினி திஸநாயக்கா இப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாடே எம்மிடம் எஞ்சியுள்ளதொன்று என்பதுதான் அவரின் முரண்பாட்டின் உச்சமாகும்.

ஏற்கனவே தமிழ் மக்களும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இந்திய-சிறிலங்கா உடன்பாட்டை நிராகரித்துள்ளனர். இதன் காரணமாக இந்திய இராணுவத்துடன் இரண்டு வருடங்களுக்கு மேலாகப் போராடியும் உள்ளனர். இதற்குப் பெரும் விலையும் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாட்டை காமினி தெரிவு செய்துள்ளமையானது அவரது தவறான கற்பிதத்தையும், உள்முரண்பாட்டையும் காட்டுவதாகவே உள்ளது. இதேவேளை அவரின் குறிக்கோள் பிரச்சினைக்குத் தீர்வு என்பதைவிட வேறு எங்கோ இருப்பதும் தெரிகின்றது.

அது முடியப் போவதில்லை கொள்கைகளும், கோட்பாடுகளும் உன்னதமானவை. அன்றும், இன்றும் என்றும் நான் போற்றும் தலைவர் தொண்டமானே ஆவார். தலைவர் தொண்டமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி உண்மையாகவும், நேர்மையாகவும், தியாக சிந்தனையோடும் அரும் தொண்டு ஆற்றியவன் நான். இவ்வாறு இ. தொ. காவின் தொழிலுறவு இயக்குநரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமாகிய இரா. தங்கவேல் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண முதல்வர் டபிள்யூ பீ. பீ. டி திசாநாயக்கா தலைமையில் அண்மையில் அமைச்சர் நியமனம் பெற்ற காதருக்கு வரவேற்பு தெரிவிக்கும் வைபவத்தில் ...கையில் மலையகமெங்கும் பரந்து விரிந்து வாழ்கின்ற எமது மக்களுக்கு அளப்பரிய பணியை ஆற்றி அவர்களின் இதயத்தில் உன்னதமான இடத்தைப் பெற்றவன் நான். நான் பெற்ற நற்பெயரையும் புகழையும் கேவலம் பட்டத்திற்காகவோ, பதவிக்காகவோ, பணத்துக்காகவோ பணயம் வைத்ததும் இல்லை. வைக்கப் போவதும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

அண்மையில் மத்திய மாகாணசபையில் மத்திய மாகாண சபையின் முதலமைச்சரை ஆதரித்தமை தொடர்பாக அமைச்சர் தொண்டமானினால் துரோகிகள் என்று வர்ணிக்கப்படுபவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணம்வழங்குவதிலும் பாகுபாடு காட்டப்படுகிறது

### அம்பாறை தமிழ் மக்கள் புகார்

வெள்ள நிவாரணக் கொடுப்பனவில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆலயடிவேம்பு, திருக்கோவில் மற்றும்காரைதீவுபோன்றதமிழ்க் கிராமங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நோக்கப்படுவதாக புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தமிழ்கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த போதும் கூட ஒரு சிலருக்கு மட்டுமே வெள்ள நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த தமிழ்க் கிராமங்களை அண்டியுள்ள ஏனைய கிராம மக்களுக்கு தாராளமாக வெள்ள நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு உள்ளன. அரசியல்வாதிகள் ஒரு புறத்திலும், அதிகாரிகள் மறுபுறத்திலுமாக போட்டிபோட்டுக் கொண்டு இக் கிராமங்களுக்கு நிவாரணம் வழங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

## மாகோ கப்பல் மூலம் இலவச பாடப்புத்தகங்கள்

வடபகுதிக்கான இலவசப் பாடப்புத்தகங்களின் தொகுதி கொழும்பில் தரித்துள்ள 'மாகோ' கப்பலில் தற்போது ஏற்றப்பட்டு வருகிறது. இக் கப்பலில் 6000 பீப்பா மண்ணெண்ணெய்ஒரு தொகுதி மலத்தின் தூள் என்பனவும் எடுத்து வரப்படவுள்ளது. எதிர்வரும் மூன்றாம் திகதி கப்பல் கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### - உள்நாட்டு அமைச்சர் பாபர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இருக்கும் அரபு தீவிரவாதிகள் அனைவரும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது. அப்படி வெளியேறாதிருக்கும் அரபு தீவிரவாதிகள் நாடுகடத்தப்படுவார்கள் என்றும் பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் நசிருல்லா பாபர் பாராளுமன்றத்தில் இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், மற்றுமொரு நாட்டிற்கு எதிராக பாகிஸ்தானில் இருந்து சதி நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட முயல்வதை அனுமதிக்க முடியாதென அவர் தெரிவித்தார்

பாகிஸ்தானின் அயல் நாடான ஆப்கானிஸ்தானிலிருந்து அரபு தீவிரவாதிகள் பலரும் பாகிஸ்தானுக்குள் ஊடுருவியிருந்தது தெரிந்ததே. அல்ஜீரியா, எகிப்து, டியூனிசியா ஆகிய நாடுகள் தமது நாட்டவர்களான அரபு தீவிரவாதிகளை நாடு கடத்தும்படி பாகிஸ்தானை வற்புறுத்திக் கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு அமைச்சர் பாபர் மேலும்கூறுகையில்; ஆப்கான் புனித யுத்தத்தில் பங்கேற்ற அரபுக்கள் சகலரும் ஜனவரி 31-ம் திகதிக்கு முன்பாக நாட்டைவிட்டு தாம் விரும்பும் நாடுகளுக்கு வெளியேறவேண்டும் என்றும் அவ்வாறு வெளியேறாதோர் பலவந்தமாக நாடுகடத்தப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

## பிக்பென் கடிகாரம் செயலிழந்தது

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள மிகப் பிரபல்யமான பிக்பென் கடிகாரம் கடந்த ஞாயிறன்று மூன்று மணிநேரம் செயலிழந்து இருந்ததாகக் கூறப்படுகிறது. உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளும் பிக்பென் கடிகார நேரத்தையே சரியானதாக கருதுவது குறிப்பிடத்தக்கது.

## 509 அகதிகள் திரும்பினர்

இலங்கை தமிழ் அகதிகள் 509 பேர் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்திலிருந்து எம். வி. ராமனுஜம் கப்பல் மூலம் தலைமன்னாருக்கு அனுப்பப்பட்டனர். அடுத்த 17ஆம் திகதி மேலும் 3000 அகதிகள் இலங்கை திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

## தொலைக்காட்சிகள் மீது பாப்பரசர் கண்டனம்

(வத்திக்கான்)

தொலைக்காட்சி குடும்ப வாழ்வுக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியிருப்பதாக பரிசுத்த பாப்பரசர் கண்டனம் செய்துள்ளார். தொலைக்காட்சியானது வக்கிரமான பாலுணர்வுகளையும், வன்முறைகளையும் பிரமாதப்படுத்துவதுடன் போலியான வாழ்க்கைப் பண்புகளை தான்தோன்றித்தனமாகப் பரப்பி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். அத்துடன் தொலைக்காட்சியை குழந்தைகளை ஆராட்டுவதற்கான இலத்திரனியல் ஆயாவாக பயன்படுத்தும் பெற்றோரையும் பாப்பரசர் கடுமையாக சாடியுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் 38 ஆவது உலக பரிவர்த்தனை தினத்தை முன்னிட்டு செய்தியொன்றை விடுத்துள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆபாசப் படங்களையும், கொடூர வன்முறைகளின் தத்ரூப சித்திரிப்புக்களையும் ஒளிபரப்புவதன் மூலம் தொலைக்காட்சி தரக்குறைவான வாழ்க்கை பெறுமதிகளையும், மாதிரிப் பழக்க வழக்கங்களையும் பரப்புவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

## இந்திய எல்லையை நோக்கி பாக். ஏவுகணைத் தாக்குதல்

(டில்லி)

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டத்தில் நேற்றும் பாகிஸ்தானிய துருப்புகள் ஏறிகணை வீச்சு தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆறு ராக்கட்டுகள் ஏவப்பட்டிருந்தபோதும் சேதம் பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை கடந்த நான்கு தினங்களில் பாகிஸ்தான் நடத்திய ஆறாவது தாக்குதல் இது வென்றும் இதுவரை பாகிஸ்தானிலிருந்து இருபத்தைந்து ராக்கட்டுக்கள் ஏவப்பட்டு இருப்பதாகவும் இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர் இதுவரையில் செலுத்தப்பட்ட ராக்கட்டுகளில் ஒரு ராக்கட்டினால் மட்டும் 16 பேருக்கு காயம் ஏற்பட்டதாக மேலும் கூறப்படுகிறது

## ரங்கூனில் தீ

பர்மியத் தலைநகரான ரங்கூனில் தீவிரமாக பரவிய தீயினால் 5,000 பேர் வீடு வாசல்களை இழந்ததாக பர்மிய வானொலி தெரிவித்தது.

## விவேகானந்தர் பிறந்தநாள்

(வடமராட்சி)
சுவாமி விவேகானந்தரின் 132-வது பிறந்த நாள் திதி பூசை எதிர்வரும் 2ஆம் திகதி பருத்தித்துறை சிறி சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது; இந்நிகழ்வின்போது பூஜை, பஜனை மற்றும் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. பா. ரகுவரன் அவர்களின் சொற்பொழிவும் இடம்பெறும் 4ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றும் காலை 9 மணிக்குஆரம்பமாகும்;(யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 29-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 481

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

28-4183, 24-1757, 27-9033, 24-4323, 24-1250
40-2573, 24-5121, 26-7227, 22-3887, 27-7281
42-3615, 41-9038, 24-7087, 24-5437, 24-7527
42-3368, 27-6259.

வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்!

26-4436, 27-9756, 27-5775, 27-7537, 24-5323
42-8316, 22-3938, 27-2761, 26-5202, 24-7774
42-3419, 28-9259, 24-8631, 26-4579, 24-3063
28-2511, 24-9744, 42-1178, 24-4468, 24-4992
28-5039, 27-8155.


கலைச்சுடர் கிராம அபிவிருத்தி
மகளிர் சங்கம்
மனையியல்
**கண்காட்சியும் விற்பனையும்**

காலம்: 30-01-94 காலை 9-00 மணியிலிருந்து
31-01-94 மாலை 6-00 மணி வரை
இடம்: கலைச்சுடர் சனசமூக நிலையம்
பிரதம விருந்தினர்: திரு. க. குணராசா
(பிரதேச செயலர் - யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிருவாகம்:
(7375) கலைச்சுடர் கி. அ. ம. ச.


# டிசம்பர் ஒளிவீச்சு வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)
டிசம்பர் மாத ஒளிவீச்சு நாடா வெளிவந்துள்ளது. இதை யாழ். நகரில் உள்ள சகல வீடியோ கடைகளிலும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன;

விரைவில் இது அகன்ற திரையிலும் காண்பிக்கப்படவுள்ளது;

இந்த ஒளிவீச்சு நாடாவில், யுத்தமுனையில் பல அரிய சாதனைகள் படைத்த போராளிகளுககுத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் பரிசில்கள் வழங்கி கௌரவித்தல், சிறிலங்கா வான்படையின் குண்டுவீச்சு படுகொலைகள், வெள்ளத்தினாலான அனர்த்தங்கள், நத்தார் கொண்டாட்டங்கள் என்பனவற்றோடு சிறப்புச் செய்தியாக பூநகரி வெற்றிநாள் கொண்டாட்டங்கள் என்பனவை இடம் பெறுகின்றன;

### போராட்ட

ரின் கனவு;

இன்றைய கலைஞர்களுக்கு இந்த மண்ணின் வேதனையையும் வீரத்தையும் பாட வேண்டிய தேவையுள்ளது.

இசைக்கும் தமிழனுக்கும் நீண்டகால தொடர்பு உள்ளது. பிரிக்க முடியாத உறவு உள்ளது என்றார்.

அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில் மூத்த தளபதி திரு: பானு அவர்கள் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைக்க யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பெற்றுக் கொண்டார்.

முன்னதாக மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா அவர்களும் நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் அவர்களும் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார்கள். மட்டு. அம்பாறை கலை பண்பாட்டுக் கழகத்தைச்சேர்ந்த திரு. ஈஸ்வரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு: புதுவை இரத்தினதுரை அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வின் போது யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா அவர்கள் கலைஞர்களை கௌரவித்தார்.

### அத்தியாவசிய

இருந்தும் பொருள்கள் இறக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று மாலை வந்த திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கையயடுத்து இரண்டு கப்பல்களில் இருந்தும் பொருள்கள் இறக்கப்படவுள்ளன. மேற்படி கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு ஏதுவாக நான்கு இழுவைப் படகுகள் மட்டுமே உள்ளன.

### வவுனியாவில்

விருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் குறித்து இவர்கள் ஆராய்ந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்களுக்கு 'பாதுகாப்பு' வழங்குவது குறித்து திருகோணமலை கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

### ஒற்றையாட்சியை

காக கட்சி அரசியல் அவசியமானதல்ல. தேசியப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பெரும்பான்மை சமூகம் பலம் பொருந்தி விளங்கினால் சிறுபான்மை சமூகங்களும் அதன் மூலம் பலமடையும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தா.ர்

### வாணிபம்

வாணிபம்/தொழிலின் பெயரும், பதிவு இலக்கமும் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஃ "ON APPROVAL" எனும் சிட்டையைப்பயன்படுத்துவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்;

ஃ அனைத்துக் கொள்வனவுகளையும் உறுதிசெய்யும்வகையில் உரிய சிட்டைகள் முறையாகப் பேணப்படவேண்டும்.

மேற்படி ஒழுங்குமுறைகளைக் கவனத்திற் கொள்ளாதவர்களின் வாணிபம்/ தொழிற்பதிவை நீக்கிக் கொள்ள நேரிடும் என்பதைக் கருத்திற் கொள்ளுமாறும் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

### மீனவர்

கடலில் காணாமற்போன மீனவரான சோமசுந்தரத்துடன் கூடசேர்ந்து சென்று நீந்தி தப்பிக் கரைசேர்ந்த மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது தாளையடி மருதங்கேணியில் வசித்து வருபவராகிய கவுரிப்பிள்ளை யேசுதாசன்(குட்டி) (வயது 18) என்ற மீனவர் தெரிவிக்கையில் சோமசுந்தரமும் நானும் சுழிபுரம் சவுக்கடி புளியந்துறையில் இருந்து கட்டுமரம் ஒன்றில் இரவு வேளை சூடை வலைத் தொழிலிற்காக சென்று அப்பகுதிக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுவிட்டு திரும்பி வரும் வேளை காங்கேசன் துறைப் பக்கமாக விருந்து "சுப்பர் டோறா" பீரங்கி விசைப்படகில் கடலை நோக்கி வெளிச்சம் பாய்ச்சியபடி ரோந்து சுற்றிவந்த சிறிலங்கா கடற்படையினர்தமது படகிலிருந்து அகோர பீரங்கித் தாக்குதலையும், கலிபர் வேட்டுக்களையும் தீர்த்த வண்ணம் எம்மை நோக்கி வந்தனர்; கலிபர் சன்னங்கள் எமது கட்டுமரத்திலும் வந்து விழுந்ததினால் நங்கூரத்தை கடலில் வீசிவிட்டு இருவரும்

### எமது

தெரிவு செய்யப்பட்ட இந்த அரசுக்கு மக்களின் மனித உரிமைகளை வழங்கும் நல்லெண்ணம் கூட இல்லை.

ஆங்கிலநாட்டுக் குடியேற்ற ஆட்சிக்கு முன்னர் இரண்டு அரசுகள் இலங்கையில் இருந்தன. ஆங்கிலேயர் நிர்வாகக் காரணங்களுக்காக இரு அரசுகளையும் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர். ஒரு தேசமல்ல இரு தேசங்கள் இருந்தன. நீண்டகால யுத்த அனுபவங்களிலிருந்து எமக்கு ஒன்று தெளிவாகின்றது. ஒருமுகப்பட்ட ஒற்றைஆட்சி அமைப்பின் கீழ் தமிழர்களாகிய நாம் இங்களவருடன் ஐக்கியமாக வாழ முடியாது என்றும்,

தமிழர்களுடைய அபிலாசைகளை ஏனைய மக்களுக்கும் எடுத்துக்கூறிசமாதானத்துக்கும்,புரிந்துணர்வுக்குமான சூழ்நிலையை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம். தங்களுடைய செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இனப்பிரச்சினையை உபயோகிக்கும் அரசியல்வாதிகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உடைக்கப்பட்ட

இதனால் தபால் தரம் பிரிப்பு மிகுந்த சிரமத்தின் மத்தியில் நடைபெற்றதாகவும் தெரிவித்தார்:

மேலும் இன்றும் தபால் விநியோகம் நடைபெறுமெனவும் அப் பேச்சாளர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (பா)

### வீரச்சாவு

மீது கடந்த 24-ம் திகதி மாலை 3-00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் விக்கினேஸ்வரராஜா/விக்கினேஸ்வரன் (தங்கராஜா மகேந்திரன், கிரான் மட்டக்களப்பு)எனும் போராளிக்கும் கந்தன் (கண்டலடி, வாகரை) எனும் ஆதரவாளருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இன்று நீச்சல்போட்டி

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயமாணவர்களுக்கு இடையே நீச்சல் போட்டி ஒன்று இன்று காலை 7.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ப. அன்னலிங்கம் தலைமையில் இடம் பெறும்;

பாடசாலைக்கு முன்னால் உள்ள பெருங்குளத்தில் நீச்சல் போட்டி நடைபெறும். (24)

### இன்றைய

இந்த ஒப்பந்தத்தின்படி இந்திய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு சிறிலங்கா அரசாங்கத்திற்கு முடியும் இவ்வாறான ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பான முடிவை இந்திய அரசாங்கமே எடுக்கவேண்டும். எந்த அடிப்படையில் பெறுவது என்பது குறித்து முடிவு செய்வதும் ஒரு சிக்கலான பிரச்சினையாகும். இன்னொரு நாட்டின் தலையீடு என்பது நன்கு சிந்தித்து எடுக்கவேண்டிய முடிவாகும்,

நீண்டகாலம் தாமதம் செய்யாது இங்கு ஏற்பட்டுள்ள பதற்றநிலை தொடர்பாக பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும்.

யுத்தநடவடிக்கையில் நல்லதொரு நிலையை அடைவதற்கும் இந்நாட்டில் நல்லதொரு நிலைமையை ஏற்படுத்தவும் நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

பிரேமதாசா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நாம் ஐ. தே. கவுடன் ஒன்றிணைவதையே மக்கள்எதிர்பார்த்தனர். இன்று நான் ஐ. தே; கவில் இணைந்து கொண்டது எமது கட்சியின் பெரும்பான்மையினர் எடுத்தமுடிவு. இன்றைய நாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டே நான் ஐ. தே. கவில் இணைந்தேன்.


இலங்கை போன்ற நாட்டுககு அண்டைய நாடுகளுடன் மிக நெருக்கமான உறவு இருக்கவேண்டும். இதன் அடிப்படையில் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த என்னால் இயன்றதைச் செய்ய நான் தயாராக உள்ளேன்.


ஜனவரி மாதம் உலகை வலம் வந்து விட்டீர்களா?
**விஞ்ஞானத் தொழில் நுட்பத்தின் புதிய சாதனை!!**





## மரண அறிவித்தல்கள்





## ஜனவரி உலாவில்

- ✲ விஞ்ஞான விந்தைகள்
- ✲ விண்வெளி ஆய்வுகள்
- ✲ உலக விவகாரங்கள்
- ✲ விளையாட்டுச்செய்திகள்
- ✲ குற்றவியல்
- ✲ செய்திச்சரங்கள்
- ✲ சமூகவியல்
- ✲ முகாமைத்துவம்
- ✲ சுற்றுச்சூழல்
- ✲ தொழில் நுட்பச் சாதனைகள்
- ✲ உயிரின் வரலாறு
- ✲ உளவியல்

**ஆகிய அற்புதமான விடயங்களைத் தாங்கி வருகிறது**

✲ யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

**உலக உலா செயலகம்**

144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8480)


கடலில் வீசிவிட்டு இருவரும் கடலினுள் குதித்து கரையை நோக்கி நீந்தினோம். சற்றுத் தூரம் நீந்திய சோமசுந்தரம் தன்னால் நீந்த இயலாதென கூறி மீண்டும் கட்டுமரத்தில் ஏறிக்கொண்டார். பீரங்கித் தாக்குதல் தொடர்ந்தும் இடம்பெற்றதால் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு பலத்த சிரமத்தின் மத்தியில் நீந்தி சம்பில்துறையை அண்டிய பகுதியில் கரைசேர்ந்தேன். பின்னர் ஒருவாறு எமது துறையை நோக்கி நடந்து சென்று நடந்த சம்பவத்தை மற்றைய மீனவர்களிடம் எடுத்துரைத்தேன். அந்த வேளை ''சுப்பர் டோறா'' படகுக்கு மேலும் உதவியாக மூன்று விசைப்படகுகள் சேர்ந்து கொண்டு கரையை நோக்கி அகோர தாக்குதலை மேற்கொண்டுவிட்டு விடிந்த பின் சென்றன. அப்போது நங்கூரமிடப்பட்ட கட்டுமரம் கடலில் தெரிவதைக் கண்ட நான் கரையிலிருந்த மீனவர்கள் உதவியுடன் கடலில் சென்று பார்த்தபோது சோமசுந்தரத்தைக் காணவில்லை. எமது கட்டுமரம் பலமாக சேதப்பட்டும், மீன்பிடி வலைகள் உருகி சேதப்பட்ட நிலையிலும், நாம் பிடித்த மீன்கள் அனைத்தும் சிதைவுற்றும் காணப்பட்டன. எனது கூட்டாளி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டாரோ அல்லது கடலினுள் தவறிவிட்டாரோ என கூறமுடியாத நிலையில் உள்ளதாக எமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேலும் இத் தாக்குதல் சம்பவத்தின்போது பல மீனவர்களின் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த மீன்பிடி உபகரணங்கள் சேதப்பட்டுள்ளன. அத்தோடு தொழிலில் ஈடுபட்டிருந்த பல மீனவர்கள் காயங்கள் எதுவும் இன்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர் என மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

ஆறுகால்மடம், புது வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், ராஜேஸ்வரி, பாலகிருஷ்ணன், மகாராஜா, இலட்சுமிப்பிள்ளை (மணம்), நடேசு ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மயில்வாகனம், காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் மாமனாரும், புவனேஸ்வரி, பராசக்தி, செல்வராணி, கோகிலகுமார் (கனடா), உதயகுமார் (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்), சிறிக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று பி. ப. 4-30 மணியளவில் (29-1-94) நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
சிவஞானம் இலட்சுமிப்பிள்ளை (மணம்) மகள்

(சி-8482)

## கணபதிப்பிள்ளை தங்கத்துரை

(புலோலி தெற்கு, புலோலி)

அல்வாயைப் பிறப்பிடமாக கொண்டவரும், புலோலியில் வசித்து வந்தவருமாகிய கணபதிப்பிள்ளை தங்கத்துரை 28-01-1994-ல் சிவபதமடைந்து விட்டார். அன்னார் முன்னாள் மட்டக்களப்பு, கொழும்புத்துறை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், வரதராஜன் (ஆசிரியர்), உதயராணி, ஜெயராணி, காந்தி, கண்ணதாசன், நந்தகுமார், தேவகுமார், வசந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. தியாகராசா, திரு. திருநாவுக்கரசு, பொன்னுத்துரை. சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. சத்தியநாதன், திரு. ஜெயதேவன், திரு. மனோகரன், திருமதி வானதி வரதராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகரத்தினம் தங்கத்துரை
(மனைவி)

(7366)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.